விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 017 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 20 வெள்ளிக்கிழமை (05.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஜனாதிபதியின் யாழ்.வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

### நான்கு பேர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 04

## யாழில் பலத்த பாதுகாப்பு இராணுவம், பொலிஸ் குவிப்பு



15

# 2025ஆம் ஆண்டுக்குள் மீள்குடியேற்றம்

## யாழில் ஜனாதிபதி ரணில்



- வடக்கில் காணி விடுவிப்பு துரிதப்படுத்தப்படும்.
- காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை 6 மாதங்களுக்குள் நிறைவு செய்ய அறிவுறுத்து.
- நாட்டில் முதலிடுவதற்கு புலம்பெயர்ந்தோருக்கு அழைப்பு.
- வடக்கு குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு.

(15ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் கைதிகளை விடுவிக்குக

## ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மகஜர் ஒன்றினை கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் கையளிப்பு செய்யப் 16

## கில்மிசாவுக்கு ஜனாதிபதி நேரில் வாழ்த்துத் தெரிவிப்பு



04

## மீண்டும் கார் இறக்குமதி?

(கொழும்பு)

1000ccக்கும் குறைந்த இயந்திரத் திறன் கொண்ட கார்களை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக, வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை 15

## பொங்கலின் பின் அரச ஊழியர்களுக்கு பொருளாதார நிவாரணங்கள் - ரணில்

(யாழ்ப்பாணம்)

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என தான் அறிவதாகவும், இம்முறை தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் பின்னர் அரச ஊழியர்களுக்கு ஓரளவான பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப் பெறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னர் மக்களுக்கு பொருளாதார நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதாகவும் ஜனாதிபதி 04

### மயங்கி வீழ்ந்த

## கடற்றொழிலாளி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் கடலில் மயங்கிய தொழிலாளி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குருநகரைச் சேர்ந்த அமலசூரி 15

## வரி செலுத்த வேண்டிய 50 இலட்சம் பேர் அடையாளம்

### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

(கொழும்பு)

வரி செலுத்த வேண்டிய சுமார் 50 இலட்சம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளர் கீர்த்தி நாபான தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரவிக்கையில்,

"ஜனவரி 1ஆம் திகதி இறைவரித் 15

## ரணில் இன்று வவுனியா விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வவுனியா மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வவுனியாவில் இடம்பெறும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான விசேட 04

## வாகனப் பதிவுக்கு TIN எண் கட்டாயம்

### போக்குவரத்து ஆணையாளர்

(கொழும்பு)

பெப்ரவரி முதல் அனைத்து வாகனப் பதிவு மற்றும் வாகனப் பரிமாற்றத்திற்கும் TIN எண் கட்டாயம் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 06.12.2023 புதன்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார்

அமரர்

## திருமதி. சறோஜா சற்குணசிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளங்கள், துண்டுப்பிரசுரம், பதாதை மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 46, சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(18491)
077 715 0356
077 990 0041
இங்ஙனம்
குடும்பத்தினர்

# போராட்டத்தில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## மின்சார சபை

மின்சார சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுபடும் மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு சட்ட மூலத்தை மீளப்பெற வேண்டிய தேவை கிடையாது என மின்சார சபையின் ஊடக பேச்சாளர் நொயல்பியன்த தெரிவித்தார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்துக்கு எதிராக மின்சார சேவை சங்கத்தினர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டும். மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என இவர்கள் தான் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். தற்போது எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். வர்த்தமானி மற்றும் சுற்றறிக்கைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடும் ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)


## ஆசிரியர் பதவி வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றுக்கு கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம், புவியியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் தேவை.

(C-8084)

077 087 2903
075 087 2903

யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருடம் அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க



எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி வழங்கவுள்ளோம்.

- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலைவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

சிறிராம் ஜூவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

(C-8083)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 03 - 10 - 1949 | 03 - 01 - 2024 |



## அந்தோனிப்பிள்ளை அல்பிரட்

(இளைப்பாறிய உள்ளக கணக்காளர், சாவகச்சேரி நகரசபை)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அல்பிரட் (மில்யோகம்) அவர்கள் நேற்று முன்தினம் (03.01.2024) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அக்னஸ் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - மேரி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மினி (பப்பி) அவர்களின் அன்புக் கணவரும் டன்ஸ்ரன் (கனடா), நிதர்சினி (நோர்வே), றயேன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பீட்டர், ஜெயராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான துரை, பெனடிக் ரத்தினம், மொனிக்கா, நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் போல் எட்வேர்ட் (நோர்வே), வேர்ஜினி (கனடா), அனுஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிளவுடியா, வியோமிகா (நோர்வே), கிஷானி, ஏஞ்சலினா, அனஸ்ரன், அன்ரியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் லூசியா நிக்கலாப்பிள்ளையின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நிகழ்வானது நாளை (06.01.2024) சனிக்கிழமை காலை 9.45 மணியளவில் பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுக்கப்பட்டு 10.00 மணியளவில் புனித நிக்கோலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தவசிக்குளம்,
மிருசுவில்.
(18499)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.12.2023 அன்று இறைபதம் அடைந்த எமது பாசமிகு தந்தை

அமரர்

## திரு. வல்லிபுரம் இராசநாயகம்

(Lorry Body Builder)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.01.2024) சனிக்கிழமை அதிகாலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் சபிண்டீகரண கிரியைகள் நாளை மறுதினம் (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தி ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

கட்டைவேலி,
கரவெட்டி கிழக்கு.
(18500)
077 355 1037
077 563 1384
இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனவை அதிகரிக்காவிட்டால்

# கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை

## அரசிற்கு கால அவகாசம் வழங்கிய அரச ஊழியர்கள்

(கொழும்பு)

**அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச, மாகாண அரச சேவைகள் தொழிற் சங்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளன.**

நிதியமைச்சர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவினால் அறிவிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய சூழ்நிலையில் அது அதிகரிக்கப்பட வேண்டுமென சங்கத்தின் இணைப்பாளர் சந்தன சூரிய ஆராச்சி தெரிவித்துள்ளார்.

"வற் வரி அதிகரிப்பால், பொருட்களின் விலைகள், எரிபொருள், எரிவாயு, தண்ணீர் கட்டணம் மற்றும் அனைத்து சேவைகளின் விலைகளும் உயர்ந்துள்ளன.

நாங்கள் கோரிய சம்பள உயர்வையோ அல்லது 20,000 கொடுப்பனவையோ வழங்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த அரசுக்கு ஜனவரி 25 வரை கால அவகாசம் தருகின்றோம்.



அதன் பின்னர் மறு அறிவித்தல் இன்றி இந்த நிலைமைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு கடுமையான தொழில்சார் நடவடிக்கைகளை எடுக்க தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (நி-6)

## கட்சியிலிருந்து விலகியவர்கள் மீண்டும் இணைந்து பயணிக்கலாம்

### மொட்டு அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து விலக்கியவர்களில் முற்போக்கான தலைவர்கள் மீண்டும் கட்சியுடன் இணைந்து பயணிப்பதற்கு கதவு திறந்தே உள்ளது என்று அக் கட்சியின் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த சுதந்திர கட்சி உறுப்பினரான ஷான் விய லாஸ் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியுடன் கூட்டணியாக போட்டியிட்டார். எனவே அவர் எதிரணிக்கு சென்றதால் எமக்கு தாக்கம் அல்ல.

எது எப்படி இருந்தாலும் எமது கட்சிக்கு எதிராக கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட ஹெலிகொப்டர் கூட்டணி போன்ற பல கூட்டணிகள் தற்போது உடைந்து வருகின்றன. எனவே எம்மோடு இணைந்து பயணிப்பதற்கான சந்தர்ப்பம் அவ்வாறே இருப்பதால் வெளியேறிய முற்போக்கு தலைவர்களுக்கு நாம் மீண்டும் அழைப்பு விடுகின்றோம்.

வற்வரி அதிகரிப்பில் எமக்கு பிரச்சினை இருப்பதோடு கட்சி என்ற ரீதியில் நாம் அதற்கு இணங்கவில்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போலி போராட்டங்கள், பிரச்சாரங்கள் மூலம் அந்நிய செலாவணி தடுக்கப் பட்டதோடு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையும் தடுக்கப்பட்டது.

இதனை செய்தவர்களே இன்று வற்வரி அதிகரிப்பிற்கு எதிராக கதைக்கின்றார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

## தட்டம்மை தடுப்பூசியை மேலதிகமாக வழங்க முடிவு

### தொற்று நோயியல் பிரிவு

(கொழும்பு)

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசியை மேலதிகமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நாளை 6 ஆம் திகதி குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த தகவலை தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

சிறு குழந்தைக்கு அம்மை நோய் வந்தால் அது நீண்ட காலச் சிக்கல்களுக்கு வழி வகுக்கும். இது தடுப்பூசியின் மேலதிக டோஸ் ஆகும். வயது பூர்த்தியடையும் போது பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசியை கட்டாயமாக பெற வேண்டும்." என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## மின்சார சபை ஊழியர்கள் இரண்டாவது நாளாக போராட்டம்

(கொழும்பு)

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மின்சார சபையை மறுசீரமைக்கும் சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார சபை ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

மின்சார சபையின் பிரதான அலுவலகத்திற்கு எதிரே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உத்தேச சட்டமூலத்தின் ஊடாக மின்சார சபையை 12 நிறுவனங்களாக பிரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒன்றிணைந்த மின்சாரத்துறை தொழிற் சங்க தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார். (நி-6)

## செய்தித்துளிகள்

### மீண்டும் வாகன இறக்குமதிக்கு ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கார்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி 1000 சிசிக்கும் குறைவான திறன் கொண்ட கார்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளதாக குறித்த சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இறக்குமதிக்கு தேவையான ஏற்பாடுகள் அடுத்த மாதத்திற்குள் செய்யப்படும் என தொழிற் சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் வருமான வரியை உயர்த்துவதும் முக்கிய நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும் எனவும் கூறப்படுகிறது. (நி-6)

### தொடரும் கைதிகளின் உயிரிழப்புகள்

(கொழும்பு)

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார். காலிகராபிட்டிய வைத்திய சாலை யில் சிகிச்சை பெற்று வந்த கைதி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த கைதி கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. உயிரிழந்த கைதி கொட்டவாகம பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவர் என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

### லிந்துலையில் வீடுகள் தீக்கிரை

(கண்டி)

லிந்துலை-பெரிய ராணிவத்தை தோட்டத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 வீடுகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

9 ஆம் இலக்கம் லயன் குடியிருப்பிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் 10 லயன் அறைகள் குறித்த நெடுங்குடியிருப்பு தொகுதியில் இருந்துள்ளன.

பொதுமக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தீ விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், சொத்துகள் சேதம் அடைந்துள்ளன. (நி-6)

### வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் கைது

(கொழும்பு)

27 இலட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்த சம்பவம் நேற்று வியாக்கிழமை இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்த 48 வயதுடைய வர்த்தகராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## யோசப் ஜெயராஜன் (ராஜன்)

( ஓய்வுபெற்ற புனித வளனர் கத்தோலிக்க அச்சக – ஒப்புநோக்குனர் )



**மண்ணில் - 04.04.1951**
**விண்ணில் -03.01.2024**

தெகிவளையைப் பிறப்பிடமாகவும் இல. 65/23, மேற்கு ஒழுங்கை, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் ஜெயராஜன் (ராஜன்) அவர்கள் கடந்த 03.01.2024 (புதன்கிழமை) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.M.யோசப் கேற்றூட் சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் றெஜினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி சறோஜா (ஜெயா) அவர்களின் அன்புக் கணவரும் கஜானி (U.K), யூட்டனிஸ்ரன் (ஆசிரியர் - மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை), நிஜானி (சிற்றி மெடிக்கல்ஸ் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மினோஜ் (UK), ரட்ணகுமார் (சனா கூலிங் இஞ்சினியரிங்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லஜிஸ்ரன் (UK), ஷகிஸ்ரன் (UK), ரடிஸ்ரன் (UK), றியா றோஷின் ஆகியோரின் பாசமிகு பேரனும் அன்ரன் (கனடா), ஜெயசீலன் (கனடா), ஜெயானந்தா (யோசப் மாஸ்ரர் -முன்னாள் ஆசிரியர் - புனித மாட்டீனார் குருமடம்), அருட்சகோதரி பிரான்சிஸ் (திருக்குடும்பக் கன்னியர் சபை - யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (கனடா), யோசப்பின் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மேரி ஜெசிந்தா (ஜீவா - செட்டிக்குளம்), மெட்டில்டா (அற்புதம் - செட்டிகுளம்), மேரி பற்றீசியா (ஓய்வுபெற்ற - சமுர்த்தி உத்தியோகத்தர்), மேரி அன்ரனிற்றா (ஆசிரியர் - வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை), அக்னஸ்மாலினி, நிக்சன் சுரேஸ் (R.D.A - செட்டிகுளம்), காலஞ்சென்ற சுபோதினி மற்றும் சுபாஸ்கரன் (கட்டார்), யோண் சுரேந்திரன் ( லின்சன்ற் - வீரபுரம்), காலஞ்சென்ற வரதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயசீலி (கனடா), றீற்றா ஜெயராணி (கனடா), காலஞ்சென்ற சுலோஜனா (திரு இருதயக் கல்லூரி - கரவெட்டி) மற்றும் வசந்தி (கனடா), ஜெபரட்ணம் (இளைப்பாறிய உப அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர், செல்வராஜ், இராசலிங்கம் மற்றும் அல்பிரட் அரியறஞ்சன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - சக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), மறைவாணன் (பிரதம தபாலகம் - யாழ்ப்பாணம்), அமுதா, அனித்தா, சுபா (ஆசிரியர் - வீரமாணிக்கம் குளம் திருமகள் வித்தியாலயம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யா/ புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யா/ கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 65/23, மேற்கு ஒழுங்கை,**
**மாட்டீன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(18504)

*தகவல்:*
**குடும்பத்தினர்**
**076 332 5624**

# எவ்வளவு தடைகள் வந்தாலும் கல்விப்பணி ஒத்திவைக்கப்படாது

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

எவ்வாறான தடைகள் வந்தாலும் கல்வித்துறையில் பணிகளை ஒத்திவைக்க வாய்ப்பில்லை எனவும், கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வித்துறையின் அனைத்து துறைகளுடனும் நல்ல ஒருங்கிணைப்பை பேணுவது அவசியமானது எனவும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சினால் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள், எதிர்கால கொள்கை முடிவுகள், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் அமைச்சர் தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதியின்...

கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கில்மிசாவை நேரில் அழைத்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (ம-7,33)

## பொங்கலின்...

உறுதியளித்தார்.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தத்தின் காரணமாக நிலுவையிலிருந்து அனைத்து பத்திரங்களும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன என்றும், அடுத்த நான்கு காலாண்டுகளில் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7)

## ஜனாதிபதியின்...

நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் சட்ட ஆலோசகர் கனகரத்தினம் சுகாஷ், உறுப்பினர்களாகிய பொன்மாஸ்டர், அருண்மதி, ஜெகன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, நல்லிணக்க நாடகம் போடாதே, தென்னகோனை கைது செய், மக்களின் வாழ்க்கையினை அழிக்காதே, கைது செய்தவர்களை விடுதலை செய், ஜனநாயக போராட்டத்தினை தடுத்து நிறுத்தாதே என கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,33)

## கில்மிசாவுக்கு...

இந்தியாவில் தனியார் தமிழ்த் தொலைக்காட்சியில் இடம்பெற்ற "சரிகமப" இசை நிகழ்ச்சியில் பங்குபற்றி முதலிடம் பெற்ற மாணவி செல்வி உதயசீலன் கில்மிசாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் வாழ்த்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்

## வாகனப்...

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், TIN இலக்கம் இன்றி இந்த செயற்பாடுகளை மேற்கொள்ள எவ்வித வாய்ப்பும் இல்லை என்றார். (ம-7)

## ரணில்...

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கு பற்றவுள்ளார். (ம-7)

# 45ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

**கடந்த 2023.11.23 வியாழக்கிழமை**
**அமரத்துவமடைந்த எமது அன்புத் தெய்வம்**
**தீன்சுவை உரிமையாளரின் அம்மா**



## அமரர் முருகையா இராசமணி

அவர்களின் 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர் வரும் 2024.01.06 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதனை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்த நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-8082)

**7 ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

**குடும்பத்தினர்**
**(தீன்சுவை வெதுப்பகம்**
**புதுக்குடியிருப்பு)**
**தொடர்பு : 077 305 6733**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா விவசாய நிலங்களில் பூச்சித் தாக்கம் அதிகரிப்பு

(வவுனியா)

**வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கைகளில் வண்ணத்துப் பூச்சியை போன்ற ஒரு பூச்சி இனம் நோயைப் பரப்பி வருவதாகவும் இதன் காரணமாக தமது செய்கை பெரும் பாதிப்பை அடைந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.**

குறித்த நோயை கட்டுப் படுத்துவதற்கு பல வகையான கிருமி நாசினிகளை பயன்படுத்திய போதிலும் அவை எதுவும் பலனின்றி போயுள்ளதாக தெரிவிக்கும் விவசாயிகள் தாம் கடன் பட்டு செய்த நெற் செய்கை இவ்வாறு பாதிப்புக்குள்ளாவதை யிட்டு வேதனை அடைவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் கபிலநிற தத்தி, வெண் முதுகுத் தத்தி, மடிச்சு கட்டி போன்ற நோய்கள் தமது நெற்பயிர்களை தாக்கிய நிலையில் அவற்றை ஓரளவு கட்டுப்படுத்தி வருகின்ற கட்டத்தில் இவ்வாறான வண்ணாத்தி பூச்சி போன்ற புதிய பூச்சி இனம் ஒன்று தமது வயல்வெளிகளில் காணப்படுவதாக தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட பிரதிமாகாண விவசாய பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த நோயானது அந்து பூச்சி என அடையாளப்படுத்துவதாகவும் இதனைக் கட்டுப் படுத்துவதற்கு தமது விவசாய போதனாசிரியரை நாடி அது தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தார். (நி-6)

# வற்வரி அதிகரிப்பால் கல்வி தடைப்படும் அபாயம்

(கொழும்பு)

நடைமுறைக்கு வரும் வற்வரி அதிகரிப்பின் விளைவால், அப்பியாசக் கொப்பிகள் முதல் பாடசாலை போக்குவரத்து சேவைகள் வரை பாதிப் பினை ஏற்படுத்துவதால், நாட்டில் கல்வி தடைப்படும் அபாயம் இருப்பதாக நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கல்வித்துறைக்கு வரி விதிக்க வேண்டாம் என அனைத்து தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அர சாங்கம் அதனை கருத்திற்கொள்ளாது இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக வலியுறுத்தினார். (நி-6)

# 109 ஐ அழையுங்கள்

(கொழும்பு)

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து முறைப்பாடு அளிக்க பொலிஸார் அவசர தொலைபேசி எண் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அதன்படி, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக ஏதேனும் தகவல் தெரிந்தால் 109 என்ற அவசர எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (நி-6)

# மக்கள் மீதான சுமை 75 சதவீதமாக குறைக்கப்படும்

## அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இந்த வருடத்தை சாதகமான பொருளாதார வேகத்துடன் ஆரம்பிப்பதன் மூலம் வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75 சதவீதமாக குறைக்கப்படும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்காலத்திற்கான முதலீடு அரசாங்கத்திற்கு ஆதரவாகும். சிலர் வரி என்று கூறி நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இருப்பினும், இலங்கையின் வரி 12% ஆகும். ஆனால் வேறு நாடுகளின் வரி சுமார் 38% முதல் 43% வரை ஆகும்.

எவ்வாறாயினும் வரி திருத்தங்களில் எந்தவொரு ஆய்வையும் நடத்தாமல் சில நிறுவனங்கள் பொதுமக்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளன.

2024 ஆம் ஆண்டில், நுகர்வோர் விவகார ஆணையத்திற்கு ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்.

வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75 சதவீதமாக குறைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-6)

# பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் விரிவுபடுத்தப்படும்

## ஜனாதிபதி நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு முதல் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளை 50% இலிருந்து 100% ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை மருத்துவ உதவி வழங்கப்படாத நோய்கள் கண்டறியப்பட்டு, அந்த நோய்களுக்கான மருத்துவ உதவிகள் வழங்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு முதல், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு, தனியார் அல்லது அரை அரச மருத்துவமனைகளில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு மருத்துவ உதவி வழங்கப்பட வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தனியார் அல்லது அரை அரச மருத்துவமனைகள் தவிர, அரசு மருத்துவமனைகளும் எலும்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் வெளியில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு இந்த ஆண்டு முதல் மருத்துவ உதவி வழங்கப்படும்.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் நோயாளர்களின் குடும்ப அலகு ஒன்றின் மாதாந்த வருமானமான 150,000 ரூபாவை 200,000 ரூபாவாக அதிகரிக்க முடியும் என்றும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# இராசிபலன்

05.01.2024
மார்கழி 20, வெள்ளிக்கிழமை
நவமி முன்னிரவு 8.59 மணிவரை

சித்திரை பிற்பகல் 5.35 மணிவரை
சுபநேரம் -6.31-8.01 மணிவரை
இராகுகாலம்-11.00-12.31 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரட்டாதி, உத்தரட்டாதி.

வளவன்




நண்பர்கள் நம்பிக்கைக்கு பத்திரமாக விளங்குவார்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.




விரத வழிபாடுகளில் அதிக நம்பிக்கை கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்ப்பானவர்கள் மனம் மாறுவார்




அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவு-பகை பாராமல் உதவும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவு ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




அலுவலகப் பணிகள் துரிதமாகும், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




பிரியமான சிலருடன் மனம்விட்டு பேசுவீர் கள், புண்ணிய காரிய ங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளை கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், சுய முயற்சி மூலம் சுகம் காண வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சேமிப்பில் சிறிது கரையலாம், வீண் விரயங்கள் ஏற்படலாம்.

அன்பு குறைந்தால் இடைவெளி பெரிதாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரியமடையும் டெங்கு!

# மூன்று நாட்களில் 282 பேர் அடையாளம்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**(யாழ்ப்பாணம்)**

**கடந்த மூன்று நாட்களிலும் யாழில் 282 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தற்போது மிகத் தீவிரமாகக் காணப்படுகிறது. குறிப்பாக மருதங்கேணி, நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு நாளும் சராசரியாக 70 முதல் 100 வரை புதிய நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

கடந்த வருடத்தில் மாவட்டத்தில் 3986 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 6 இறப்புக்களும் பதிவு செய்யப்பட்டன. இக் காலப் பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டால் அது டெங்கு நோய்க்கான அறிகுறியாக இருக்கலாம்.

எனவே தாமதிக்காது உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்று குறித்த நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (நி-6-33)

## ஆளுநர் உட்பட உயர் அதிகாரிகளை சந்தித்த வஜிர



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் யாழ்ப்பாண விஜயத்துடன் இணைந்து அமுல்படுத்தவுள்ள வேலைத் திட்டம் தொடர்பில் வடமாகாண ஆளுநர், அரச உயர் அதிகாரிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவினால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாதசுந்தரன் உள்ளிட்டவர்களை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இங்கு வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதுடன் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. (நி-6-33)

## உடுத்துறை பகுதியில் கரையொதுங்கிய மர்மப்பொருள்



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஒன்பதாம் வட்டாரம் அரசடி முருகன் கோவிலடி கடற்கரை அருகில் மர்மப்பொருள் கரை யொதுங்கியுள்ளது.

கரையொதுங்கிய குறித்த பொருளை பொதுமக்கள் அதிகளவானோர் பார் வையிட்டு வருவதுடன் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருளில் Asia 2 என பெயரிடப்பட்டுள்ளதாகவும் கப்பலில் இருந்து தவறி விழுந்து கரையொதுங்கியிருக்கலாமென சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

அண்மைய நாட்களாக உடுத்துறை வேம்படி, நாகர் கோவில், உடுத்துறை போன்ற கடற்கரைப் பகுதிகளில் பல்வேறு விதமான மர்ம பொருட்கள் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் எழுதிய "அரசியல் பொருளாதாரம், தத்துவம் ஒரு பார்வை" நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி, இராமநாதன் வீதி, இல.34 முகவரியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (நி-6)

## 7 பவுண் தாலியை அறுத்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தேன் விற்பனையில் ஈடுபடுவது போல பாசாங்கு செய்து மூதாட்டியிடம் 7 பவுண் பெறுமதியான தாலியை அறுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை தொண்டைமானாறு பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாகவே கோண்டாவில் மற்றும் தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் சந்தேக நபர்கள் ஒப்படைக்கப்பட்டனர். (நி-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 650 | 650 | 650 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 1300 | 1200 | 1200 | 1200 |
| தக்காளி | 800 | 700 | 700 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 140 | 150 |
| கோவா | 450 | 500 | 550 | 500 |
| கரட் | 650 | 100 | 850 | 1000 |
| பூசணி | 140 | 180 | 160 | 200 |
| புடோல் | 320 | 350 | 220 | 300 |
| வாழைக்காய் | 240 | 70 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 480 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 380 | 300 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 500 | 300 | 750 | 400 |
| லீக்ஸ் | 450 | 400 | 450 | 600 |
| பீற்றூட் | -- | 900 | 800 | 800 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 350 | 400 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 650 | 500 | 400 | 550 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 150 | 200 |
| தேசிக்காய் | 450 | 600 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 650 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | -- | -- | 800 | 1000 |
| முள்ளங்கி | 200 | 250 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 180 | 120 | 80 |
| வல்லாரை | 80 | 30 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 120 | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 வீதத்தால்

# குறைவடையும் மின்கட்டணம்

### மின்சாரசபை தகவல்

(கொழும்பு)

**கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 18 வீதத்தினால் அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணம் 50 வீதத்தினால் குறைக்கப்படுமென மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரகே தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, கடந்த மூன்று மாதங்களாகப் பெய்த தொடர் மழையின் பயனை மக்களுக்கு வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை செயற்பட்டு வருகிறது.

மேலும், நீரினால் மின்சாரம் உற்பத்தி செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபம் நிச்சயமாக பொதுமக்களுக்கே கிடைக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

மின்சார சபையின் கடந்த வருட இறுதிக் கணக்கு அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கைகள், தயாரிக்கப்பட்டவுடன், மின் கட்டணத்தை குறைப்பதற்கான யோசனையை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

# வெளியான இரகசிய தகவல்

(கொழும்பு)

இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றது.

ஆளும் கட்சியினர் ஏனைய அரசியல் குழுக்கள் மற்றும் கட்சிகளுடன் இது தொடர்பில் சில கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

எவ்வாறாயினும் பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பில் இதுவரையில் எவ்வித ஆயத்தங்களும் இடம்பெறவில்லை என பாராளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வவு.தீவிரமடையும் எலிக்காய்ச்சல்

### சுகாதாரப்பிரிவினர் எச்சரிக்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் பரவுவதால் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். இக் காய்ச்சலானது எலிகளில் இருந்து மனிதனுக்குப் பரவும்ஒருவகை பக்ரீறியாநோய் ஆகும்.

ஈரமான, சேறு நிறைந்த இடங்களில் வேலை செய்பவர்கள் அல்லது வயல்களில் வேலை செய்வோர் தங்கள் கால்களில் காயங்கள் அல்லது தோல் நோய்கள் இருப்பின் அவதானமாக இருத்தல் வேண்டும். தற்போது பலர் எலிக்காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, காய்ச்சல், தலைவலி, உடல்வலி என் பன ஏற்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவும். குறிப்பாக அண்மையில் வவுனியா, செட்டி குளம், முகத்தான்குளத்தை சேர்ந்த பிரசாங்கர் என்ற 22 வயது இளைஞன் எலிக்காய்ச்சல் காரணமாக மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

## அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமைபுரியும் திரு. கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 06 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- ➢ அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- ➢ கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கானநிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.
- ➢ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கான ஒன்பது (9) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ➢ சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- ➢ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- ➢ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2024.01.07 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொ. இல | கிளையின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஈச்சமோட்டை | 17-18 | இராசரத்தினம் வேல்குமார் | 2024.01.07 | மு.ப 10.00 மணி | அரியாலை ஜெயபாரதி சனசமுக நிலைய மண்டபம் 12-கண்டி வீதி அரியாலை |
| 02 | நாவலடி | 19 | சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | 2024.01.07 | மு.ப 10.00 மணி | அரியாலை உதயநிலா முன் பள்ளி மண்டபம் அரியாலை கிழக்கு நாவலடி |
| 03 | முடமாவடி | 21-24 | ஜெயபாலன் சதீஸ் | 2024.01.07 | மு.ப 10.00 மணி | அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க தலைமைக் காரியாலய மண்டபம் |
| 04 | செம்மணி | 22 | கனகரத்தினம் வக்சன் | 2024.01.07 | மு.ப 10.00 மணி | அரியாலை ஜெயபாரதி முன் பள்ளி மண்டபம் 12-கண்டி வீதி அரியாலை. |
| 05 | திருநெல்வேலி | 23 | பாலச்சந்திரன் பாலரவி | 2024.01.07 | மு.ப 10.30 மணி | அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய மண்டபம் |
| 06 | ஆடியபாதம் | 25 | சிங்கராசா சியாந்தன் | 2024.01.07 | மு.ப 10.30 மணி | அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய மண்டபம் |

**இவ் அறிவித்தலினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று கூட்டத்திற்கு சமூகமளிக்கவும்.**

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**அலுவலகம் இல 857, கே.கே.எஸ்.வீதி.**
**யாழ்ப்பாணம்.**

(18497)

**ஒப்பம்- திரு.கி.சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி**
**ஆணையாளர், யாழ்ப்பாணம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# உக்கிரமடையும் உக்ரைன் போர்



(மொஸ்கோ)

கடந்த சில நாட்களாக உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான போர் பதற்றம் அதிகரித்த நிலையில் நேற்று முன்தினம் உக்ரைன் மீது ரஷ்யா கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

அதாவது ரஷ்யா தனது ஆயுத கிட்டங்கில் பலம் வாய்ந்த ஏவுகணையான கின்சால் ஏவுகணைகளை கொண்டு உக்ரைன் நகரங்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஒலியை விட 10 மடங்கு வேகத்துடன் பயணிக்கும் இந்த ஏவுகணைகள் உக்ரைனின் கீவ், கார்கீவ் நகரங்களின் மீது பயங்கரமாக வெடித்து சிதறின.

இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததாகவும் 130 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் உக்ரைன் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கு பதிலடி தரும் வகையில் ரஷ்யாவின் பெல்கோரட் பகுதிநோக்கிட்ரோன் படையை உக்ரைன் அனுப்பியது. இருப்பினும் அதனை ரஷ்ய இராணுவத்தின் வான்பாதுகாப்பு தளவாடங்கள் சுட்டு வீழ்த்தி உள்ளன.


கின்சால் என்பது வான்வழி ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணை ஆகும், இது அதன் விலை மற்றும் குறைந்த இருப்பு காரணமாக ரஷ்யப் படைகளால் அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் ஏவப்பட்ட இந்த ஏவுகணைகள், போர் தொடங்கியதிலிருந்து ஒரு தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட அதிக பட்ச எண்ணிக்கையாகும் என்று உக்ரைன் விமானப்படை செய்தித் தொடர்பாளர் யூரி இஹ்னாட் தெரிவித்துள்ளார். (நி-6)

# ஈரானில் அடுத்தடுத்து 103 பேர் உயிரிழப்

(டெஹ்ரான்)


**ஈரானில் இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புகளில்103 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 171 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.**



கடந்தநான்கு வருடங்களிற்கு முன்னர் ஈராக்கில் அமெரிக்காவின் ஆளில்லா விமானதாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் இராணுவ அதிகாரி காசிம் சுலைமானியின் நினைவேந்தல் நிகழ்வில் இரண்டு குண்டுகள் வெடித்ததில்103 பேர் கொல்லப்பட்டதுடன் 171 பேர் படு காயமடைந்துள்ளனர்.

பத்துநிமிட இடைவெளியில் இரண்டு குண்டுகள் வெடித்தன என சம்பவத்தை நேரில் பார்த்த

# தம் மீதான தடை உத்தரவை ரத்து செய்ய கோரும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தடை விதித்து வழங்கப்பட்ட தீர்ப்பை இரத்து செய்யக்கோரி, டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க உச்ச நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவதற்கு கொலராடோ உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் தடைவிதித்தது.

அரசியலமைப்பின் கிளர்ச்சி என்ற வாக்கியத்தை குறிப்பிட்டுக்காட்டி, ட்ரம்ப் ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமான வேட்பாளர் அல்ல வென நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அமெரிக்க அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் 3 ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதி வேட்பாளரொருவர் தகுதி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதல் வையாகும். (நி-6)

# ரஷ்யாவிற்கான பொருளாதார தடைகளை இறுக்கமாக்குங்கள்

## மேற்குலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்த போலந்து

(போலந்து)

ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகளை மேற்குலக நாடுகள் கடுமையாக்க வேண்டும் என போலந்து கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் உக்ரைன் மீதான மொஸ்கோவின் சமீபத்திய ஷெல் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக நீண்ட தூர ஏவுகணைகளை கீவிற்கு வழங்க வேண்டும் என்றும் போலந்து வலியுறுத்தியுள்ளது.



உக்ரைன் மீதான சமீபத்திய தாக்குதலுக்கு புடின் புரிந்துகொள்ளும் மொழியில் பதிலளிக்க வேண்டும் எனவும் போலந்து வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

# அமெரிக்காவில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டது

(வோஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள வைத்தியசாலைகளில் பரவிவரும் கொரோனா, சளி மற்றும் சுவாச நோய்கள் பரவுவதைத் தடுக்கும் விதமாக முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா, நியூயோர்க் மற்றும் இல்லினோய்ஸ் ஆகிய மாநிலங்களில் உள்ள வைத்தியசாலைகளிளாலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 17-23 வரையான காலப்பகுதியில், அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் இருந்து 29,000 கொவிட் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 16% அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங குண்டுவெடிப்புகள்!

## ப்பு: 171 படுகாயம்



சிலர் தெரிவித்துள்ளனர்.

வெளியாகும் தகவல்கள் மிகவும் திறமையான முறையில் திட்டமிடப்பட்டு இந்த குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டதை வெளிப்படுத்துகின்றன.

சுலைமானியின் உடல் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து 700 மீற்றர் தூரத்தில் முதலாவது குண்டு வெடித்தது. இரண்டாவது குண்டு 1 கிலோமீற்றர் தூரத்தில் வெடித்தது. இரண்டு குண்டுகள் தொலைவிலிருந்து வெடிக்கவைக்கப்பட்டன என தெரிவித்துள்ள அதிகாரிகள் இது பயங்கரவாத தாக்குதல் என குறிப்பிட்டுள்ளனர்.(நி-6)

# போருக்கு மத்தியில் மழை குளிரால் தவிக்கும் காசா மக்கள்

(காசா)

இஸ்ரேல் தாக்குதலால் வடக்கு காசாவில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் தெற்கு பகுதியில் தஞ்சம்.


மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் அவதிப்பட்டு வரும் நிலையில் மழை, குளிரால் மேலும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இஸ்ரேல்- ஹமாஸ் அமைப்பு இடையேயான போரால் காசா மக்கள் கடும் துயரத்தை சந்தித்து வருகிறார்கள். 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து தெற்கு காசாவில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காசா முழுவதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால் உயிரை கையில் பிடித்தப்படி இருக்கிறார்கள். மேலும் உணவு, குடிநீர், மருந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு உள்ளதால் மக்கள் தவித்து வருகிறார்கள்.

இந் நிலையில் காசாவில் ரபா நகரில் மழை பெய்து வருகிறது. மேலும் கடும் குளிரும் நிலவி வருகிறது. அதேபோல் மற்ற பகுதிகளிலும் மழை பெய்கிறது. இதனால் கூடாரங்களில் தங்கியுள்ள மக்கள் அவதி அடைந்துள்ளனர்.

ஏற்கனவே உணவு பற்றாக்குறையால் தவிக்கும் காசா மக்களுக்கு தற்போதைய மழை துயரத்தை அதிகப்படுத்தி உள்ளது. (நி-6)



# செங்கடலில் கப்பல்கள் மீது தாக்குதல்

## ஹவுதிக்கு இறுதி எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது ஹவுதி தாக்குதல் நடத்தி வருகிறது. கப்பல்களை தாக்கி அதில் உள்ள மாலுமிகள் உள்ளிட்டோரை சிறைப்பிடிக்கவும் செய்கின்றனர்.

ஹமாஸ்க்கு எதிராக போர் பிரகடனம் அறிவித்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ்க்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சி குழு செங்கடலில் செல்லும் சர்வதேச கப்பல்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் அமெரிக்கா செங்கடலில் கண்காணிப்பை அதிகரித்துள்ளது. டிசெம்பர் 19 ஆம் திகதியில் இருந்து 23 தாக்குதல்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளனர்.


கடந்த ஒருசில தினங்களுக்கு முன் கப்பல் மீது தாக்குதல் நடத்த வந்த ஹவுதியின் மூன்று படகுகளை அமெரிக்க கப்பற்படை தாக்கி அழித்தது.

இதில் 10 ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர். கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுப்போம் என ஹவுதி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும்.

இல்லையெனில் இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் அறிவித்துள்ளன.

அமெரிக்காவுடன் அவுஸ்திரேலியா, பஹ்ரைன், பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, நியூசிலாந்து சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஒன்றிணைந்துள்ளன. (நி-6)





# ஒரு வருடத்தில் மட்டும்

## 170 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றிய சவுதிஅரேபியா

(ரியாத்)

குற்றங்களுக்கு அதிகபட்சமாக மரணதண்டனை விதிக்கும் நாடுகளில் சவுதி அரேபியாவும் ஒன்றாகும்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் சல்மான் மற்றும் அவரது மகன் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் ஆட்சிக்கு வந்ததில் இருந்து மரணதண்டனை விதிப்பது அதிகரித்துள்ளது.

சவுதி அரேபியாவில் கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் 38 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் கூற்றுப்படி, 2022ஆம் ஆண்டை விட 2023இல் மரணதண்டனை வழக்குகள் அதிகரித்துள்ளன.

2022இல் மொத்தம் 147 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு முன்பு 2019ஆம் ஆண்டு சவுதியில் 187 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

2023இல் மரணதண்டனை விதிக்கப்பட்ட 170 பேரில் 33 பேர் பயங்கரவாதக் குற்றச்சாட்டை எதிர்கொண்டனர்.

மரணதண்டனை தொடர்பாக சவுதி அரேபியாவில் உள்ள அரசாங்கத்தையும், நீதிமன்றத்தையும் மனித உரிமை அமைப்புகள் கடுமையாக விமர்சிக்கின்றன.

இதை இளவரசர் முகமது பின் சல்மான் மாற்ற விரும்புகிறார், ஆனாலும் மரணதண்டனை வழக்குகள் 2023இல் மேலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2024



நுனி மரத்தில் அமர்ந்து கொண்டு அடிமரத்தை வெட்டக் கூடாது என்பதை அறிந்த நீங்கள், உண்ட வீட்டுக்கு குந்தகம் நினைக்காதவர்கள். செய் நன்றியை ஒருபோதும் மறவாத நீங் கள், தன்னை எதிரியாக நினைத்த வர்களுக்கும் நல்லதே நினைக்கும் குணம் படைத்தவர்கள்.

உங்கள் இராசிக்கு தைரிய வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் எதையும் வரை குருபகவான் உங்கள் ராசிக்கு லாப வீட்டிலே வலுவாக காணப்படு வதால் திடீர் பணவரவு உண்டு. நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த பணம் கைக்கு வரும். மூத்த சகோதரர் உதவ முன் வருவார். பெரிய பதவிகள் தேடி வரும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். வீடு கட்டும் பணியை தொடர்வீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். பழைய கடனில் ஒருபகுதியை தீர்க்க வழி பிறக்கும்.

1.5.2024 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் 12 ஆம் வீட்டில் சென்று மறைவதால் திடீர் பயணங்கள், செலவுகள் அதிகரிக்கும். ஒரே நேரத்தில் பல வேலைகளையும் பார்க்க வேண்டி வரும். அநாவசிய செலவுகளை குறைக் கப் பாருங்கள். முன்பின் அறியாத வர்களை வீட்டில் சேர்க்க வேண்டாம். ஆனால் வீடு, மனை விற்பது வாங்கு வது லாபகரமாக முடிவடையும். நீண்ட நாட்களாக தரிசிக்க நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றுவருவீர்கள். ராகு பகவான் இந்த வருடம் முடியும் வரை உங்கள் இராசிக்கு 10 ஆம் வீட்டில் அமர்வதால் வேலைச்சுமை அதிகரி தாமதம், வீண் அலைச்சல், டென்ஷன் வந்து போகும். உங்களை அறியாம லேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். தாயாரின் உடல் நலம் பாதிக் கும். அவருடன் வீண் விவாதங்களும் வந்து போகும். அவ்வப்போது மற்றவர் களைப் போல நம்மால் சுதந்திரமாக இருக்க முடியவில்லையே என வருந்து வீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். சனி பகவான் இந்த வருடம் முழுக்க இராசிக்கு 9 ஆம் வீட்டில் தொடர்வதால்




அதிகாரப் பதவியில் இருப்ப வர்களின் நட்பு கிடைக்கும். தந்தையின் உடல் நிலை பாதிக்கும். வழக்கில் திருப்பம் ஏற்படும். அக்கம் -பக்கம் வீட்டாருடன் இருந்த சண்டை, சச்சரவுகள் நீங்கும். வாடிக்கையாளர்களை கவர்ந்திழு ப்பீர்கள். பங்குதாரர்கள் அவ்வப்போது புலம்பினாலும் ஒத்துழைப்பார்கள். ஓகஸ்ட், அக்டோபர், நவம்பர் மாதங் களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத் தாகும். புதுக்கிளைகள் தொடங்கும் வாய்ப்பும் வரும். கமிஷன், உணவு, பிளாஸ்டிக் வகைகளால் ஆதாயம் அதிக ரிக்கும். உத்தியோகஸ்தர்கள் 1.5.2024 முதல் வீண் பழிகளை சுமக்க வேண்டி வரும்.

நேரம், காலம் பார்க்காமல் உழைத் தும் கடைசியில் மிஞ்சியதென்னவோ கெட்ட பெயர் தான் என்று அலுத்துக் கொள்ள வேண்டி வரும். உங்களை பாடாய்படுத்திய உயரதிகாரி இடம் மாறுவார். நல்ல மேலதிகாரி பணியில் வந்து சேர்வார். புது சலுகைகளும் கிடைக்கும். அதிக சம்பளத்துடன் வேறு நல்ல வாய்ப்புகளும் தேடி வரும். ஜூன், செப்டம்பர், நவம்பர் மாதங்களில் சம்பள உயர்வு உண்டு.

இந்த புத்தாண்டு சின்ன சின்ன ஏற்றத்தாழ்வுகளையும், செலவுகளை யும் கொடுத்து வந்தாலும் உங்களின்

## அநாவசியச் செலவுகளைக் குறைக்கப்பாருங்கள்

தள்ளிப் போடாமல் தெளிவாக முடிவெடு ப்பீர்கள். ரத்த அழுத்தம், நீரிழிவு நோயெல்லாம் கட்டுப்பாட்டுக்குள் வரும். இளைய சகோதர வகையில் இருந்த சிக்கல்கள் தீரும். பூர்வீக சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். இந்த ஆண்டு தொடக்கம் முதல் 30.4.2024 க்கும். எதிர்த்தவர்கள் நண்பர்களா வார்கள். பெரிய பதவிகள் தேடி வரும். சிலர் புது வேலைக்கு மாறுவீர்கள்.

கேது பகவான் இந்த வருடம் முழு வதும் உங்கள் இராசிக்கு 4 ஆம் வீட்டில் அமர்வதால் வாகன விபத்துகள், காரிய

வியாபாரிகளே! மார்ச் மாதத்திலி ருந்து கணிசமாக லாபம் உயரும். வேலையாட்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்காதீர்கள். பழைய சரக்கு விற்றுத் தீரும். பழைய பாக்கிகளும் வசூ லாகும். சலுகை திட்டங்கள் மூலம் புது வளர்ச்சி பணிகள் தொய் வில்லாமல் தொடர்வதாக அமை யும்.

**பரிகாரம்:** அம்மனை சென்று வணங்குங்கள். ஆதரவற்ற மாணவி யின் கல்விக் கட்டணத்தை செலு த்துங்கள். செல்வம் பெருகும்.



எடுத்தோம் கவிழ்த்தோம் என்றி ல்லாது சந்தர்ப்ப சூழ்நிலையை உண ர்ந்து சமயோஜித புத்தியுடன் பேசும் நீங்கள் அடங்கி எழுபவர்கள். தும்பைப் பூப்போல சிரிப்பு, துடிப்பான செயல் திறனும் கொண்ட நீங்கள், நம்பி வந்தவர்களை ஒருபோதும் கை விட மாட்டீர்கள். உங்கள் இராசிக்கு தன வீடான 2 ஆம் வீட்டில் இந்த புத்தாண்டு பிறப்பதால் சோர்ந்து முடங்கி போயி ருந்த உங்கள் உள்மனதில் தன்ன ம்பிக்கை பிறக்கும். புதிய திட்டங்கள் நிறைவேறும். ஒத்து வராத, உதவாத,

சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். பிரபலங்களை பகை த்துக் கொள்ளாதீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளு ங்கள். பழைய கடன் பிரச்சினைகள் அவ்வப்போது மனதை வாட்டும். ஊர் பொது விவகாரங்களில் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள் வீர்கள். உத்தியோகத்திலும் மறைமுக எதிர்ப்புகளும், இடமாற்றங்களும் வரக்கூடும். எனவே அலுவலகத்தில் அதிக பேச்சை தவிர்ப்பது நல்லது. 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் லாப வீட்டில் அமர்வதால் எதிர்பாராத திடீர் பணவரவு உண்டு. ஏதோ ஒன்றை இழந்ததைப் போல இருந்தீர்களே! அந்த நிலை மாறி உற்சாகம் அடைவீர்கள்.

தீவிரமாக வேலைத் தேடிக் கொண் டிருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். தற்காலப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவீர்கள். மூத்த சகோதரர் பகையை மறந்து வலிய வந்து பேசுவார். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். சித்தர்கள், மகா

தொல்லை குறையும். வங்கிக் கடனில் ஒரு பகுதியை தீர்ப்பீர்கள்.

புது வீட்டில் குடி புகுவீர்கள். ராகு இந்த வருடம் முழுவதும் 9 ஆம் வீட்டில் அமர் வதால் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். தந்தையாரின் உடல் நிலை பாதிக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். திடீர் பயணங்கள் அதிக ரிக்கும். கேது 3 ஆம் வீட்டில் அமர்ந்தி ருப்பதால் புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். தாயாரின் உடல்




நிலை சீராகும். விலை உயர்ந்த ஆபர ணங்கள், ரத்தினங்களை வாங்கு வீர்கள். அதிகார பதவியில் இருப்பவ ர்கள், தொழிலதிபர்கள் உதவுவார்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திட வேண்டாம். அரசு காரியங்கள் இழு பறியாகும். யோகா, தியானத்தில் ஈடுப டுவது நல்லது.

வியாபாரிகளுக்கு சந்தை நிலவரம் குறித்து முழுமையான அறிவு கிடைக்கும். உணவு, கெமிக்கல், ஏற்று மதி - இறக்குமதி, மர வகைகளால் அதிக ஆதாயமடைவீர்கள். ஆர்வ முள்ள வேலையாட்கள் அமைவார்கள். கடையை விரிவுப்படுத்தி கட்டுவீர்கள். ஜனவரி, மே, ஜூன் மாதங்களில் வியாபாரம் சூடு பிடிக்கும். புது கிளைகள் தொடங்குவீர்கள். வாடிக்கையாளர்க ளின் வருகை அதிகரிக்கும். புது ஏஜெ ன்சி எடுப்பீர்கள்.

உத்தியோகஸ்தர்களே! அதிகாரிகள் மனம் விட்டுப் பேசுவார்கள். பெரிய பதவியில் அமர்த்தப்படுவீர்கள். மூத்த அதிகாரி அடிக்கடி விடுப்பில் செல்வதால் அந்தப் பதவிக்குரிய பணிகளையும் திறம்பட முடித்து எல்லோரையும் விய க்க வைப்பீர்கள். அரசு நிறுவனங்களில் பணியாற்றும் சிலர் விருப்ப ஓய்வு கொடுத்து விட்டு தனியார் நிறுவனங்க

## உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும்!

உண்மையில்லாத உறவுகளை ஒது க்கித் தள்ளுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். 30.4.2024 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 10ஆவது வீட்டில் தொடர்வதால் அதுவரை வேலைச்சுமை அதிகமாக இருக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

ன்களின் ஆசி கிட்டும். மருத்துவ சிகி ச்சைக்குப் பின்னும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லையே என வருந் தினீர்களே! இந்த வருடத்தில் வாரிசு உருவாகும். மகனின் திருமணத்தை விமர்சையாக நடத்துவீர்கள். எதிர் பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். உறவினர்களின் அன்புத்

பழைய வீட்டை நல்ல விலைக்கு விற்று புது இடம் வாங்குவீர்கள். வருடம் முழு வதும் அஷ்டமத்துச் சனி தொடர்வதால் முன் கோபம், பதற்றம், சிறு சிறு ஏமா ற்றம், வீண் பழி வந்து செல்லும்.

மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். முன்யோசனை இல்லாமல் ளுக்கு தாவுவீர்கள். இந்தப் புத்தாண்டு குரு பகவானின் ஆதரவால் சாதிக்கும் ஆண்டாக அமையும்.

**பரிகாரம்:** காலபைரவரை சென்று வணங்குங்கள். வாய்ப் பேச இயலாத வர்களுக்கு உதவுங்கள்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்கிகிடக்கும் திண்மக்கழிவுகளால் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

## மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(மன்னார்)

**திண்மக் கழிவகற்றல் பிரச்சினைக்கு விரைவில் ஒரு நிரந்தர தீர்வு எட்டப்படாதவிடத்து மன்னார் மாவடடத்தில் டெங்கு பரவல் அதிகரிக்கலாம் என்பதுடன் நீர் மற்றும் உணவுகள் ஊடாக பரவும் நோய் தொற்றும் அதிகரிக்க வாய்புள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.**



தற்போது மழைகாலம் என்பதனால் நோய் கிருமிகளின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக டெங்கு நுளம்புகளின் பரவல் அதிகமாக காணப்படுவதாகவும் அதே நேரம் வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நோய்களும் மழை காலத்தில் அதிகமாக பரவுவதற்கான வாய்ப்பு காணப்படும் என்பதுடன் மன்னார் நகர் பகுதியில் தேங்கியிருக்கும் இந்த திண்மக் கழிவுகள் இவ்வாறான கிருமி தொற்று பரவலுக்கு ஏதுவாக அமைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரசபையின் திண்ம கழிவகற்றல் செயற்பாடு தற்போது ஒழுங்கான முறையில் இடம் பெறாமையினால் மன்னார் நகர் பகுதி பாரியதொரு சுகாதார சீர்கேட்டு நிலமைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் மக்கள் திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது சுகாதார துறையினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-6-285)

# பழுதடைந்த உ.கிழங்கு கிளிநொச்சியில் புதைக்கப்பட்டது

(தருமபுரம்)

யாழ். விவசாயிகளுக்கு வழங்கவென கொண்டுவரப்பட்ட விதை உருளைக்கிழங்கு கிளிநொச்சியில் புதைக்கப்பட்டது.

குறித்த கிழங்குகள் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்ட நிலையில் பற்றீரியா தொற்றுக்கு உள்ளாகியிருந்தன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் முருகண்டி அக்கராஜன் வீதியின் 5ஆவது மைல் கல்லிருந்து 500மீற்றர் தூரத்தில் உள்ள காட்டில் நவீன விவசாய விரிவாக்க திட்டத்தின் வடமாகாண பிரதிப்பணிப்பாளர் விஜயகுமார் விஜீதரன், யாழ் மாவட்ட விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரஞ்சன், திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் பாலகௌரி பவளலேஸ்வரன், திருநெல்வேலி விதைகள் அத்தாட்சிப்படுத்தும் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் அ.ரமணிதரன் ஆகியோரின் முன்னிலையில் புதைக்கப்பட்டது. (நி-6-316)

# சாவிகளுடன் வீதியில் நிறுத்தப்பட்ட வாகனங்களை எடுத்துச் சென்ற பொலிஸார்


(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பகுதியில் வீதிகளில் சாவிகளுடன் விடப்பட்ட பொதுமக்களின் மோட்டார் வாகனங்களை பொலிஸார் எடுத்துச் சென்றுள்ள சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் அண்மைய நாட்களாக மோட்டார் சைக்கிள்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வருகின்றது. இதனையடுத்து மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் வீதிகளில் சாவிகளுடன் விடப்பட்ட மோட்டார் வாகனங்களை மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றிருந்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்ற மோட்டார் சைக்கிள்களின் ஆவணங்களை பரிசோதனை செய்ததன் பின்னர் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு பின்னர் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

# கிளி. மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த வஜிர



(அக்கராயன்)

பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

கலந்துரையாடலின் போது கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன அவர்கள் விடயங்களை கேட்டறிந்து கொண்டார்.

மேலும் இச் சந்திப்பின் போது மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் முன்னேற்றத்தினை நோக்கி பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தார். (நி-6-350)

# ஜனாதிபதி விஜயத்தின்போது வவுனியாவில் எதிர்ப்பு நடவடிக்கை

## ஐவருக்கு தடைஉத்தரவு

(குருமன்காடு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், குறித்த பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்யவிருந்த 5 பேருக்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் வவுனியா நீதிமன்றில் ஆஜராகி முன்வைத்த முறைப்பாட்டின் அடையில் இத் தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-6-250)

# ஜே.வி.பி தலைவரை சந்தித்த பொன்னாவெளி மக்கள் பிரதிநிதிகள்



(அக்கராயன்)

ஜே.வி.பி.தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய அநுரகுமார திசநாயக்காவை கிளிநொச்சி பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர்.

பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்திற்கு நேரடியாக வருகை தந்த ஜே.வி.பி யினர் போராட்டத்திற்கு தமது ஆதரவினை வெளிப்படுத்திய நிலையில் இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.

சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் பல கிராமங்கள் அழிவடையும். கடல் நீர் உட்புகும். கிராமங்களில் இருந்து மக்கள் இடம் பெயர வேண்டி வரும் என பல விடயங்களை ஜே.வி.பி தலைவருக்கு அனைத்து மக்கள் ஒன்றிய பிரதிநிதிகள் தெரியப்படுத்தினர்.

பிரச்சினைகளை கேட்டறிந்த ஜே.வி.பி தலைவர் பொன்னாவெளி மக்களின் பிரச்சினைகளை வெளி உலகத்திற்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பாக பாராளுமன்றத்தில் இது தொடர்பாக வெளிப்படுத்த உள்ளதாகவும் போராட்டக்காரர்களுடன் தொடர்ந்து இணைந்திருப்பதாகவும் தெரிவித்தார். (நி-6-350)

# களவாக மணல் ஏற்றி சென்ற டிப்பர் பறிமுதல்



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி சாமிப்புலம் கிராமத்தில் களவாக மணலுடன் சென்ற டிப்பரை விசேட அதிரடிப் படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. பிடிக்கப்பட்ட டிப்பர் மணலுடன் பூநகரி பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேசத்தில் தொடர்ச்சியாக மணல், மரக்கடத்தல்கள் இடம் பெறுவதன் காரணமாக இதனை தடுக்க விசேட அதிரடிப்படையினரும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர். (நி-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 370





அத்தகைய சக்தி, இளவரசரைத் தம் இஷ்டப்படி நடக்கச் செய்யும் சக்தி, ஒரே ஒருவருக்குத்தான் உண்டு"

"ஆம், ஆம்! வீர வைஷ்ணவ ஆழ்வார்க்கடியாரின் அற்புத சக்தியை அறியாதவர் யார்? அப்படிப்பட்ட புயங்கர மதயானையைக் கைத்தடியால் எதிர்த்து வென்றவருக்கு இளவரசர் எம் மாத்திரம்!"

"நான் கூறியதை நீ சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை தம்பி! பொன்னியின் செல்வர் எங்கே? இந்த ஏழை வைஷ்ணவன் எங்கே? மத யானையைக் கைத்தடிகொண்டு எதிர்ப்பேன் புலியையும் கரடியையும் சிங்கத்தையும் வெறுங் கையோடு எதிர்ப்பேன். ஆனால் பொன்னியின் செல்வர் முன் நேருக்கு நேர் நிற்கும்போது என் தைரியமெல்லாம் எங்கேயோ போய்விடுகிறது. நெஞ்சு நெகிழ்ந்து விடுகிறது. தொண்டை அடைத்து விடுகிறது. வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளி வருவது பிரம்மப்பிரயத்தனமாகி விடுகிறது."

"அவரை ஆளும் சக்தி படைத்தவர் என்று பின் யாரைச் சொன்னீர்!"

"உலகம் தெரிந்த விஷயமாயிற்றே உனக்குத் தெரியாதா? இளைய பிராட்டியைப் பற்றித்தான் சொல்கிறேன். குந்தவை தேவியின் வாக்குத்தான் அவருக்கு வேத வாக்கு!"

"ஓஹோ! பழையாறை இளைய பிராட்டியைப் பற்றியா சொல்கிறீர்? உமது சகோதரி பழுவூர் இளைய ராணியைப் பற்றித்தான் சொல்கிறீரோ என்று பார்த்தேன்!"

"நந்தினியும் அபூர்வ சக்தி உடையவள்தான். ஆனால் அவளுடைய சக்தி வேறு விதமானது."

"எப்படி? என்ன வித்தியாசம்?"

"ஒருவன் நரகத்தில் விழப் போகிறவனாயிருந்தால், அவனைத் தடுத்து நிறுத்திக் குந்தவை தேவி சொர்க்கத்துக்கு அவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார் அது ஒரு வித சக்தி. நந்தினி என்ன செய்வாள் தெரியுமா? அவளுடைய சக்தி இன்னும் ஒருபடி மேலானது என்றே சொல்ல வேண்டும். நரகத்தையே சொர்க்கம் என்று சொல்லிச் சாதித்து, அதை நம்பும் படியும் செய்து, நரகத்தில் சந்தோஷமாகக் குதிக்கும்படி செய்துவிடுவாள்!"

வந்தியத்தேவனுக்கு உடம்பு சிலிர்த்தது. நந்தினியின் குணாதிசயத்தையும் அவளுடைய பயங்கர மோகன சக்தியையும் இந்த வீர வைஷ்ணவன் எவ்வளவு சரியாக அளந்து மதிப்பிட்டு வைத்திருக்கிறான்! நந்தினி இவனுடைய சகோதரி என்று சொல்வது மெய்யாயிருக்க முடியுமா? இந்த யோசனையில் வந்தியத்தேவன் ஆழ்ந்துவிட்டபடியால் மேலே ஒன்றும் கேட்கவில்லை. சிறிது தூரம் மௌனமாக நடந்தார்கள்.

அந்த மௌனத்தைக் கலைத்துச் சில குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டது. அவர்களுக்கு எதிர்ப்பக்கத்திலிருந்து அச்சப்தம் வந்தது. சில நிமிஷத்துக்கெல்லாம் நாலு குதிரைகள் வெகுவேகமாக நாலுகால் பாய்ச்சலில் வந்தன. சூறாவளிக் காற்றைப் போல் புழுதியைக் கிளப்பிவிட்டுக் கொண்டு வந்த அக்குதிரைகள் மின்னல் மின்னும் நேரத்தில் நம் கால் நடைப் பிரயாணிகளைத் தாண்டிச் சென்றன. ஆயினும் அந்தச் சிறிய நேரத்திலேயே அக்குதிரைகளின் மேலிருந்தவர்களில் ஒருவருடைய முகத்தை வந்தியத்தேவன் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிந்தது! ஆகா! பார்த்திபேந்திர வர்மன் அல்லவா இவன்? காஞ்சியிலுள்ள இளவரசர் ஆதித்தரின் அந்தரங்க நண்பன் அல்லவா? நம்மை அவ்வளவாகப் பிடிக்காதவன் அல்லவா? இவன் எங்கே வந்துவிட்டு, எங்கே போகிறான்? எதற்காக இவன் இலங்கைக்கு வந்தான்? எப்போது வந்தான்?

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## காயத்திரி மந்திரம்



சக்கிரவர்த்தி அக்பரும். அவருடை மதியூக மந்திரியான பீர்பாலும் ஒரு நாள் மாறு வேடமணிந்து நகர் சோதனை செய்து வந்தார். அப்போது ஒரு பிச்சைக்காரன் எதிர்பட்டான். அவனைப் பார்த்த அக்பர், இந்த இனத்தவர்களுக்குப் பிச்சை எடுப்பது தவிர வேறு பயனுள்ள தொழிலெதுவும் செய்யத் தெரியாதா? என்று கேட்க, பீர்பாலின் மனத்தில் முள்ளெனத் தைத்தன அந்த வார்த்தைகள்.

பிறகு அந்தப் பிச்சைக்காரனைச் சந்தித்துக் கேட்டபொழுது தன்னுடைய பெரிய குடும்பத்தைக் காப்பற்ற வேறு வழி புலப்படாததால் பிச்சையெடுக்க முற்பட்டதாகவும், இதன் மூலம் நாளொன்றுக்கு 25 காசுகள் கிடைக்கின்றன என்றும் கூறினான்.

அதைச் செவியுற்ற பீர்பால் அவன் பிச்சையெடுப்பதை விட்டுவிட்டு தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு 10 தரம் காயத்திரி ஜபம் செய்வதாக இருந்தால் அன்றாடம் அவனுக்கு 50 காசுகள் தருவதாகக் கூறினார். அந்த ஏழையும் பிச்சை எடுப்பதை நிறுத்திவிட்டு பீர்பால் சொன்னபடி ஜபம் செய்து வந்தான். பயனெதுவும் கருதாமல் நாள் பூராகவும் காயத்திரி ஜபம் செய்து வந்ததால் அவன் முகத்திற்கு ஒரு அசாதரணமான சாந்தி ஏற்பட்டது. இதை அறிந்த பீர்பால் அந்த ஏழையை அணுகி தினம் 108 தடவை காயத்திரி ஜபம் செய்தால் அவனுக்கு மாதம் 1000 ரூபாய் தருவதாகச் சொன்னார். அதற்கும் ஒப்புக் கொண்டு அந்த ஏழையும் [illegible]மாக ஜபம் செய்தார்.

ஒரு நாள் அவனுக்கு அஞ்ஞான இருள் நீங்கியது. அவனுக்கு அமோகமான் ஆன்மீக வளர்ச்சியும் தெய்வீக ஒளியும் ஏற்ப்பட்டு, தினந்தோறும் திரளான மக்கள் அவனை நாடி வணங்கி அருள் பெற்று வந்தனர். ஒரு மாதம் ஆனதும் அந்த ஏழை பணம் வாங்க வராததால் பீர்பாலே அவன் வீட்டிற்கு வந்து பணம் கொடுத்தார். ஆனால் அவன் பணிவுடன் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து, அவனுக்குச் சிறந்த ஆன்மீக வழியைக் காட்டியதற்காக பீர்பாலுக்கு நன்றி தெரிவித்தான்.

மறுநாள் பீர்பால் அக்பரை அந்த ஏழை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவன் முகத்தில் தென்பட்ட தேஜஸையும் அங்கு அருள் பெற வந்த மக்களையும் பார்த்து அக்பர் மிக ஆச்சரியப்பட்டார். அக்பரும் அவர் காலில் விழுந்து அருள் புரியுமாறு வேண்டினார். சில மாதங்களுக்கு முன் நீங்க்ள் இகழ்ந்து பேசிய அதே பிச்சைக்காரன் தான் இவன் என்று சக்கிரவர்த்தியின் காதில் கிசு கிசுத்தார் பீர்பால். சக்கிரவர்த்தி நம்பாமல் அந்த எழையை இந்த மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்டார். அவனும் நடந்ததைச் சொன்னான். காயத்திரி ஜபம் செய்ததால் வந்த பெருமை என்று பீர்பால் விளக்கினார்.

சுருங்க கூறின், காயத்திரி ஜபத்தினால் பட்ட மரம் தழைக்கும், தரித்திரனும் தனிகனாவான். வாழ்வில் நிம்மதியின்றித் தவிப்பவர்கள் நிம்மதியும், மனச் சாந்தியும் பெறுவார்கள்.

சத்தருக்கள் நாசமடைவார்கள், பாபங்கள் நீங்கிப் பிறவித் துயர் நீங்கும். வேத ஸாரமான் இந்த மஹா மந்திரம் நம் ரிஷிகளின் அருளினால் நமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு என்பது வளரக்கூடியது. ஞானம் நிலைத்து நின்று விடக்கூடியது.

– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உங்களுக்குக் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள்

அறம் செய்ய விரும்பு என்பது ஒளவையார் அருளிய ஆத்திசூடி. அறம் செய்ய விரும்பு என்ற ஆத்திசூடி வரிகள் பாலர்களுக்காக ஒளவையார் கூறியது.

அறம் செய்யாமல், அறம் செய்ய விரும்பினால் மட்டும் போதுமா என்ற தர்க்கம் இங்கு எழலாம். அவ்வாறு எழுந்தால், அங்குதான் ஓர் உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும்.

அதாவது சிறுவர்களிடையே அறம் செய்கின்ற விருப்பத்தை அவர்களின் ஆழ்மனதில் ஏற்படுத்திவிட்டால், பின்னர் அவர்கள் வளர்ந்து தமது ஆழ்மனதில் இருக்கக்கூடிய விருப்பத்தை நிறைவேற்றுவர்.

இதனாலேயே அறம் செய்ய விரும்பு என ஒளவையார் போதித்துள்ளார்.

ஒளவையார் அருளிய ஆத்திசூடி என்பது சிறுவர் உளவியலை பண்படுத்துவது.

ஆக, மற்றவர்களுக்கு உதவி செய்வது. ஏழைகளுக்குத் தர்மம் வழங்குவது முதியவர்களைக் கனம் பண்ணுவது. மற்றவர்களுடன் இன்சொல் பேசுவது. பண்புடைச் சொற்களைப் பயன்படுத்துவது என்பனவற்றைச் சிறுபராயத்திலேயே போதிக்க வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் பெரியவர்களாக வரும்போது மேற்போந்த நல்ல சிந்தனைகளைச் செயல்படுத்துவர்.

இன்று நம் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய மிக மோசமான நிலைமையானது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு உதவுகின்ற மனநிலை இல்லாமையாகும்.

ஆம், உயர் பதவிகளில் இருப்பவர்கள் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை – அதிகாரத்தை ஏழை மக்களுக்கு உதவுவதற்காகப் பயன்படுத்த வேண்டும். அதுதான் அறம். அதுதான் தர்மம்.

ஆனால் எங்களில் பலர் தமக்குக் கிடைத்த பதவியை – அதிகாரத்தை பயன்படுத்தாமல், செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல், பொதுமக்களுக்கு உபத்திரவம் கொடுப்பதையே தங்களின் பதவிக் காலம் முழுவதிலும் செய்து விடுகின்றனர்.

உண்மை. இப்போதெல்லாம் எங்கள் மாணவர்கள் படிப்பதில் அதீத கருசனை கொண்டுள்ளனர். அதேபோன்று பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைப் படிப்பித்து விட வேண்டுமெனப் பாடுபடுகின்றனர்.

எனினும் கணிசமான மாணவர்களுக்கு அவர்களின் குடும்பப் பொருளாதாரம் அவர்களின் கல்விக்குத் தடையாக இருக்கிறது.

ஆம், யாழ்ப்பாணத்துக்கு வந்து தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற மாணவர்கள் பஸ் கட்டணத்துக்கே திண்டாடுகின்ற நிலைமையைக் காண முடிகின்றது.

எனவே இங்குதான் பாடசாலை விடுமுறைக் காலம் என்று பாராமல், மாணவர்களுக்கு பயணத்துக்கான பருவகாலச் சீட்டை வழங்குவதென்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

இதுதான் கிடைத்த சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கு உதவுவதற்காகப் பயன்படுத்துகின்ற அறம்,

இத்தகு அறத்தைச் செய்வதற்காகவே அறம் செய்ய விரும்பு என்றார் ஒளவையார்.

# நாட்டை பற்றி சிந்திக்கும் அனைவருடனும் ஒன்றிணைந்து பயணிக்க தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டைப் பற்றி சிந்திக்கும் அனைவரும் ஒன்றிணையவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரித திசேரா இணைந்து கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரப்பிரசாதங்கள், சலுகைகள், தனிப்பட்ட நன்மைகள், அதிகார பதவிகள் மற்றும் அரசியல் பங்குகளின் அடிப்படையிலான அரசியல் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் முற்றாக நிராகரித்துள்ளன.

இவ்வாறு சேரும் அனைவரும் நிபந்தனையற்ற உன்னத அறிவொளி அரசியலை நடைமுறைப்படுத்தவே ஒன்றிணைகின்றனர்.

இந்நாட்டில் நடந்த அரசியல் கட்சி தாவல்களை தூக்கி எறிந்து தங்களுக்கு முன் நாடும், தங்களுக்கு முன் மக்களும் என்ற உன்னத கருத்தின் அடிப்படையில் குடும்பவாதமற்ற, மக்கள் வாதத்தைக் கொண்ட அரசியல் கொள்கை ரீதியான பயணத்தை மேற்கொள்வதற்காகவே இந்த கூட்டணி அமைக்கப்படும்.

மனிதாபிமான முதலாளித்துவம் நீதி நியாத்தை நிறைவேற்றும் சமூக ஜனநாயகம் எனும் 2 பாதைகளின் ஊடாக ஒரு சீரான நடுநிலையான பாதையில் பயணித்து வருகின்றது.

இது சலுகைகள் வரப்பிரசாதங்களை பெறும் ரம்மியமான பயணம் அல்லாது கடினமான பயணம், சொந்தத்தை விட மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய பயணம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# எந்தவொரு தேர்தலுக்கும் பொதுஜன பெரமுன தயார்

## மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிட முடியாது என மீண்டும் வலியுறுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு குழுவினரிலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் குறித்து தனது கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம் இடம்பெறக்கூடிய எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள பெரமுன தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார் என்ற கேள்விக்கு வேடிக்கையாக நான் இல்லை என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேர்தல சட்டத்தின் கீழ் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் போட்டியிட முடியாது.

பல பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன யார் வேட்பாளர் என பார்ப்போம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# கடற்படை சிப்பாய்

## மன்னாரில் சடலமாக மீட்பு

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற்படை சிப்பாய் ஒருவர் நேற்று வியாழக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடற்படை முகாமிற்கு வெளியில் உள்ள காட்டுப் பகுதியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த கடற்படை சிப்பாய் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட கடற்படைச் சிப்பாய் 33 வயது உடையவர் எனவும் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

முள்ளிக்குளம் கடற்படை முகாமில் உள்ள கடற்படையினரின் விடுதியில் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் குறித்த கடற்படை சிப்பாய் வாழ்ந்து வந்துள்ளார்.

குறித்த கடற்படை சிப்பாய் கடந்த இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் குறித்த கடற்படை முகாமில் இருந்து மோட்டார் சைக்கிளில் வெளியில் சென்ற நிலையில் அவர் மீண்டும் முகாமிற்கு திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது கணவர் காணாமல் போனமை குறித்து அவரது மனைவி நேற்று முன்தினம் புதன்கிழமை சிலாபத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையிலே குறித்த கடற்படை சிப்பாய் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிலாபத்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

# மின்கம்பத்துடன் மோதி மோ.சைக்கிள் விபத்து

## பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

(கொழும்பு)

கொழும்பில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற 58 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# இரு அரச வங்கிகளையும் விற்பனை செய்யத் திட்டம்

## ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

நாட்டில் ‘உள்ள இரு பிரதான அரச வங்கிகள் விற்பனைக்கு தயார்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த இரண்டு அரச வங்கிகளும் இலாபம் ஈட்டும் வங்கிகள் எனவும் அவ்வாறான வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு கணக்குகளை பராமரிக்கும் இவ்விரு வங்கிகளின் நிலுவைத் தொகை அதிகமாக உள்ளதாகவும் அதில் பாதியை வசூலித்தால் இந்த இரண்டு வங்கிகளையும் பலப்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும்

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான கோரிக்கையை, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள வேட்பாளர்கள் இதனை மேற்கொள்வதாக உறுதியளிப்பார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த கால தலைவர்களும் அரசாங்கங்களும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளை அரசியல் காரணங்களுக்காக முறியடித்தன.

இந்நிலையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நம்பிக்கை இல்லாத வரையில் இலங்கை ஒரு நாடாக முன்னேற முடியாது. தேசியப் பிரச்சினைக்கு அரசியல் மூலம் மட்டும் தீர்வு காணமுடியாது. ஏனெனில் பல்வேறு எதிர்ப்புத் தாக்கங்கள் இருக்கும்.

முன்னதாக 2000 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்தார். இது ஒரு மதிப்புமிக்க முன்மொழிவாக இருந்தது.

ஆனால் அரசியல் காரணங்களால் அதை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. உண்மையில், அந்த நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியே சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கையை எதிர்த்தது.

அத்துடன் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு வரைவின் நகலை எரித்த செயற்பாட்டிலும் ஈடுபட்டது.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்க நாட்களில், புதிய அரசியலமைப்பை நிறுவுவதற்கும் அதன்படி செயற்படுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதுவும் குறுகிய அரசியல் மற்றும் இனவாதக் கண்ணோட்டங்களால் தோல்வியடைந்தது" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ம-7)


NLB
MEGA MILLIONS
மெகா மிலியன்ஸ் மெகா மில்லியன்ஸ்
NLB
தேசிய லொத்தர்

2023.12.30 நடைபெற்ற 001 சீட்டிழுப்பிலே
ரூ.50 மில்லியன் சுப்பர் பரிசு கந்தானவிற்கு
விற்பனை முகவர் திருமதி.S.D.பீரிஸ் – கந்தான

| சுப்பர் பரிசின் வெற்றி இலக்கம் | மில்லியன் பரிசுக்கான வெற்றி இலக்கம் | இலட்சாதிபதி வெற்றி இலக்கம் | ரூ.ஆயிரம் வெற்றி இலக்கம் | சிங்கப்பூர் சவாரி வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 248386 | 1616 | 1432 | 02 | 20948 |

மில்லியன் ரூபா வெற்றியாளர்கள் 48
வெற்றியாளர்களை உருவாக்கிய விற்பனை முகவர்கள்

அம்பாறை மாவட்டம்
திரு.எஸ்.ராஜேந்திரன் - அக்கரைப்பற்று
அனுராதபுரம் மாவட்டம்
திரு.W.B.பத்மசிறி- ராஜாங்கனை
திருமதி.A.B.சுனேத்ரா-கெபிடிகொல்லாவ
திருமதி.யசவதி கசநாயக-கலாவெவ
கண்டி மாவட்டம்
திரு.கில்மன் த சில்வா -கண்டி
திரு.P.அலைன் பெரேரா–திகண
திரு.P.S.ஜயவர்தன-கண்டி
இரத்தினபுரி மாவட்டம்
திரு.I.D.சிறிபால–குருவிட்ட
திரு.E.A.குணதாஸ–பெல்மடுல்ல
திரு.B.R.A.S.ரத்நாயக-பல்லேபெத்த

அம்பாந்தோட்டை மாவட்டம்
திரு.ரத்னகுமார – மித்தெனிய
திரு.பெனட் அபேசூரிய – வெலிஅத்த
யாழ்ப்பாணம் மாவட்டம்
திருமதி.V.கௌசல்யா -யாழ்ப்பாணம்
திரு.எஸ்.கனகலிங்கம்–யாழ்ப்பாணம்
களுத்துறை மாவட்டம்
திரு.பந்துல வீரசிங்க–இங்கிரிய
திரு.பெனடின் குரூஸ்–வாத்துவ
திரு.C.D.குமார–ஹொரணை

மாத்தறை மாவட்டம்
திருமதி.W.A.P.சாந்தி–மாத்தறை
திரு.வருண பிரசாத்–அக்குரஸ்ஸ
மொனராகலை மாவட்டம்
திரு.லலித் அலுத்கே–பிபில
முல்லைத்தீவு மாவட்டம்
திரு.எஸ்.ஜோர்ஜ் எட்வேட்
புத்தளம் மாவட்டம்
திரு.பக்மசிறி பீரிஸ்–மாறவில
புத்தளம் மாவட்டம்

கொழும்பு மாவட்டம்
திரு.T.F.டென்-கொட்டிகாவத்தை
திரு.சுசங்க சில்வா-வெலவத்தை
திரு.E.K.பிரேமசிறி-புறக்கோட்டை 03
கொழும்பு மாவட்டம் 02
கம்பஹா மாவட்டம்
திரு.சுனில் ரொட்ரிகோ – ஹெந்தல 02
திரு.எம்.சுமனானந்த சில்வா–கிறுவாங்கொட
திருமதி.K.A.R.மதுவந்தி–பூகொட
கம்பஹா மாவட்டம்
மாத்தளை மாவட்டம்
திரு.P.G.விஜேசிங்க – மாத்தளை
திருமதி.சுனேத்ரா ஜயலத் – கலேவெல

காலி மாவட்டம்
திரு.K.M.பத்மசிறி–போத்தல
காலி மாவட்டம்
வவுனியா மாவட்டம்
திருமதி.R.சீதா லெட்சுமி–வவுனியா
குருநாகல் மாவட்டம்
திரு.W.சகீர் கான் – குருநாகல்
திரு.கே.ஜயசேன–கல்கமுவ

811 SMS சேவையூடாக 02
NLB நலன்புரிச் சங்க விற்பனை நிலையம் 03

இலட்சம் ரூபா வெற்றியாளர்கள் 50
ரூ.1,000 வெற்றியாளர்கள் 4,764
சிங்கப்பூர் சவாரி வெற்றியாளர்கள் 05

வெல்லப்பட்டுள்ள முழுத்தொகை
ரூ.109,764,000.00
வெற்றியாளர் உங்களுக்கு எங்களது வாழ்த்துக்கள்

(C-2220)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் கார்...

எதிர்வரும் மாதத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. *(மற்றொரு செய்தி உள்ளே)* (ம-7)

## கடற்றொழிலாளி...

அன்ரனியூட் (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நண்பர்களுடன் படகில் மீன்பிடிக்க சென்றுள்ளார். இந்நிலையில் மேற்படி நபர் உடல்நல குறைவு காரணமாக மயக்கமடைந்ததைத் தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3.45 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் காலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வரி செலுத்த...

திணைக்களத்தில் 437,547 பேர் பதிவு செய்திருந்தனர். இன்று அது 10 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. வருமான ஏற்றத்தாழ்வையே பிரதானமான இலக்காகக் கொண்டுள்ளோம்.

இந்த வருமானப் பங்கீட்டைப் பார்த்தால் அதிக வருமானம் கொண்ட குழு சுமார் 20%. உள்ளது. அந்த குழுவில், மொத்த வருமானத்தில் 60% அதிகமாக பகிரப்பட்டுள்ளது."

"20 சதவிகிதம் என்று சொன்னால் சுமார் 50 லட்சம் பேர் என்று அர்த்தம். அப்படியானால் இந்த 50 லட்சம் பேரை அடையாளம் காண்பதுதான் எங்களின் முதல் இலக்கு. ஏனென்றால் அவர்கள்தான் உண்மையான வரி வருமானத்தைப் பெறும் திறன் கொண்டவர்கள்" என்றார். (ம-7)

## யாழில் பலத்த...

ஜனாதிபதி விக்கிரமசிங்க நேற்று யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.நகர்ப் பகுதி எங்கும் இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டுள்ளது.

வீதி எங்கும் பொலிஸாரின் சோதனை நடவடிக்கை இடம்பெறுவதுடன் இராணுவத்தினரும் ரோந்து பணியில் ஈடுபட்டனர். (ம-7)

## 2025ஆம்...

வடக்கு மாகாணத்திற்கான 4 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழுக்கு விஜயம் செய்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில், யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், மாவட்ட இணைத்தலைவர்களான ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோரும் தலைமை தாங்கினர்.

ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி கருத்து தெரிவித்தார்.

### காணி விடுவிப்பு

வடக்கு மாகாணத்தில் காணி விடுப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி பலாலி விமான நிலையம் மற்றும் பாதுகாப்பு துறைக்கு தேவையான காணிகள் தொடர்பில் பெப்ரவரி மாதமளவில் இறுதி தீர்மானத்தை எடுப்பதாகவும் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு சென்று காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

### மீளக்குடியமர்தல்

2025ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்தும் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும் என வட மாகாண அரசாங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தினார்.

2025ஆம் ஆண்டளவில் இடம் பெயர்ந்தவர்கள் என எவரும் இலங்கைக்குள் இருக்கக்கூடாதெனவும், அவர்களுக்கு அவசியமான வசதிகளை பெற்றுக்கொடுத்து அவர்களின் உயிர வாழும் உரிமையை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

### காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1788 பேர் காணாமல் போயிருப்பதாகப' பதிவு செய்யப்பட்டிருப்பதோடு அவற்றில் 1289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 500க்கு கிட்டிய முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி அடுத்த ஆறு மாதங்களுக்குள் அந்தப் பணிகளை நிறைவு செய்து காணாமல் போனோர் அலுவலகத்துடன் தொடர்புபட்டு செயற்படுமாறும் அறிவுறுத்தினார்.

### அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரசியல் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் ஒன்று கூடியிருந்த மேற்படி கூட்டத்தில் மாவட்டத்திற்குள் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்திருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மீள் குடியமர்த்தல், கல்வி, சுகாதாரம், காணி, மீன்பிடி, விவசாயம் மற்றும் வனப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும் வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது விசேட கவனம் செலுத்தினார்.

வட மாகாண அபிவிருத்திக்கு அவசியமான திட்டமிடலை தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை மீட்கும் வேலைத் திட்டத்தை துரிதப் படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

### புலம்பெயர்ந்தோருக்கு அழைப்பு

புதியபொருளாதார ஆணைக் குழு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் எவர் வேண்டுமானாலும் நாட்டுக்குள் முதலீடுகளைமேற்கொள்ள முடியும் என்றும், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளவர்களுக்கு அதற்கான அழைப்பை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

### பூநகரி திட்டம்

வடக்கின் வலுசக்தியை பாதுகாத்து வலுசக்தி ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான அனைத்து திட்டமிடல்களும் காணப்படுவதாகவும் பூநகரியை வலுசக்தி கேந்திர நிலையமாக மாற்றுவதாகவும் உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கின் விவசாயத்துறையை விவசாய நவீனமயப்படுத்தலுக்குள் உள்வாங்கி அதிலிருந்து பெறப்படும் பலன்களை இரட்டிப்பாக்கிகொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

### குடிநீர் பிரச்சினை

வடக்கின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கான இரு திட்டங்களுக்கு இம்முறை வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் திட்டங்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் இளங்கோவன், ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் பணிப்பாளர் ரஞ்சித் கீரத்தி தென்னகோன், யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். (ம-7,33)


லக்கி 7 VIP — திகதி 2024.01.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0175 — V 5 0 2 1 9 1 V — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி - 2024.01.04 — சீட்டிழுப்பு இலக்கம் - 1379 — F 01 71 76 82 F — Double Chance 17949

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3591 — சீட்டிழுப்பு திகதி 04.01.2024 — E 07 11 38 66 — E 42454 — தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.01.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0658 — சிம்மம் 11 12 19 38 சிம்மம் — 24833 — 21

மஹஜன சம்பத — திகதி 2024/01/04 — சீட்டிழுப்பு இலக்கம் 5349 — U 1 4 0 7 4 1

மெகா பவர் — திகதி 04/01/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1697 — B 17 40 42 57 66 — Double Chance 13194

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 04.01.2024 — வெற்றி வாரம் 057 — வர்ணம் ஊதா — T 6 0 9 3 2 3 — 99290 — சுப்பர் பரிசு ரூ. 25,585,355.20 — DLB — தொலை பேசி: 011-2 333 546-47 — Web: www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2323 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.01.04 — தினம் வியாழக்கிழமை — 23 33 55 63 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,120,923.20 — 28928 — DLB

சனிதா — திகதி 2024.01.04 — வெற்றி வாரம் 4484 — வர்ணம் சிவப்பு — 33 49 57 62 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,965,146.40 — 72833 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4035 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2024.01.04 — தினம் வியாழக்கிழமை — 10 13 25 59 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,615,030.40 — 689085 — DLB

ஜயோதா — T 23 33 45 48 69 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 487,942,166.20 — 1499 — அரஞ்சு நிறம் — 04.01.2024 — வியாழன் — DLB — 011-2 333 546-47

அட கோட்டிபதி — ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2149 — சீட்டிழுப்பு திகதி: 2024.01.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,053,816/- — 29 41 55 62 F — 815775 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

(வத்தளை)

வத்தளையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றிலிருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலையின் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளரின் அறையில் இருந்தே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது டி 56 ரக துப்பாக்கி யொன்றும், 04 மெகசின்கள் மற்றும் 9 MM ரக 18 தோட்டாக்களும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆயுதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பல் உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவ எனப்படும் சஞ்சீவ குமார சமரரத்னவிற்கு சொந்தமான தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது ஆயுதங்களுடன் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ஜனாதிபதியிடம்...

படவுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழிசெய்வதற்கான மகஜரில் கையொப்பமிடும் நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் நேற்று மதியம் 2 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சமய தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்துப் பிரதிகளை தயார்படுத்தி, யாழ். விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதியிடம் நேரில் கையளிக்கப்படவுள்ளது. (ம-7,33)


## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.

55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்)
மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk
(18434)

## A/L வரலாறு

மாவட்ட, தேசிய ரீதியிலான சாதனையாளர்களை உருவாக்கியவர்
பல சட்டத்தரணிகள் உருவாக வழிகாட்டியவர்

## M.பத்மன்

B.A (Hons) (History), M.A. (History) P.G.D.E, M.Ed. (O.U.S.L)

கற்பிக்கும் இடங்கள்

D.M.I ஆரியகுளம் சந்தி, யாழ். நகர்.
BITSMANS மானிப்பாய்
உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி

☑ A/L – 2025 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
☑ பாடம் மாறி கற்பவர்களுக்கு புதிய பிரிவு.
☑ A/L – 2024 அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

-077 482 5587
(C-8079)

## பொங்கல் அகப்பை விற்பனைக்கு

தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்

- அகப்பைகள்
- விளக்குமாறு
- திருவுபலகை
- இருபலகை
- ரொட்டித் தட்டு, சுளகு



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
077 210 5286
(18501)





## FLIGHT TICKETS BOOKINGS

- அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களினை சிறந்த விலையில் கொள்வனவு செய்ய எம்மை நாடுங்கள்
- இந்தியா விசா சேவைகள்
- கனடா, லண்டன், அவுஸ்திரேலியா மற்றும்ஐரோப்பிய நாடுகளுக்கான ரிக்கற் முன்பதிவுகள்

Apex Travels
0777 597 598/ 076 3333 644
No.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(18503)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 28 . 04 . 1939
உதிர்வு 06 . 12 . 2023

அமரர்
### பொன்னுத்துரை மகேசலிங்கம்
(கட்டிட ஒப்பந்தக்காரர்)

இல. 826 /14 ஏ, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் **சேர். பொன் இராமநாதன் வீதியில்** அமைந்துள்ள **"சரஸ்வதி மண்டபத்தில்" (ராஜா கிறீம் ஹவுஸ்)** நடைபெறும்.

அன்னார் கடந்த 06.12.2023 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பதாகைகளை சாத்தியவர்கள், கிரியைகளை நடத்திய குருமார்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 826/14ஏ, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (18482)

பொ. ஆனந்தலிங்கம் (சகோதரன்)
077 644 1859, 021 222 1521

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு எரிபொருள் நிரப்புநர்கள் தேவை.
021 222 4550
070 222 7100
(C-8080)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777
(C-8085)

## A/L - 2024 மாணவர்களுக்கான...

## PAPER CLASS

புவியியல் - N.பாபு
(சனி, ஞாயிறு - 12-2 Pm)
புதிய, தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
ஆரம்பம் : 06.01.2024 சனி 12 pm
DMI ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
T.P - 077 936 5087
(18402)

## வேலை ஆட்கள் தேவை

கோவில் சிற்ப வேலை திறமையாகச் செய்யத் தெரிந்த வேலையாட்கள் தேவை.
076 656 8309
(C-8078)

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8085)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் மற்றும் தங்கம் ஒன்றிற்கு பின்வரும் ஊழியர்கள் தேவை.

1. Supervisors
2. Waiters
3. house keeping staffs
4. Cleaners.
5. Delivery Boy.

(C-8081)
021 222 4550
070 222 7100


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org